

உ

சிவமயம்

இரட்டை விநாயகர் துணை

திருச்சிற்றம்பலம்

# சித்திரைப் பெருவிழா அழைப்பிதழ் – 2017

tnhrce.org

## அருள்மிகு பெரியநாயகி அம்மன் உடனுறை அருள்மிகு பெருவுடையார் திருக்கோயில்

தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானம்



tnhrce.org

பூழியர் கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்த பிரான் அடி போற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி

பாண்டிய மன்னன் வெப்புநோயைத் தீர்த்த திருஞானசம்பந்தர் திருவடிகள் போற்றி
கல்லைத் தெப்பமாகக் கொண்டு கடலிலிருந்து மீண்ட திருநாவுக்கரசர் திருவடிகள் போற்றி
திருநாவலூரில் அவதரித்த இறைவன் தோழராம் சுந்தரர் திருவடிகள் போற்றி
திருவாதவூரில் அவதரித்த மாணிக்க வாசகர் திருவடிகள் போற்றி.



சித்தர் கருவூரார்



அருணகிரிநாதர்

பன்னெடுங் காலம் பணிசெய்து பழையோர் தாம்பலர் ஏம்பலித்திருக்க
என்னெடுங் கோயில் நெஞ்சுவீற்றிருந்த எளிமையை யென்று நான் மறக்கேன்
மின்னெடும் புருவத் திளமயி லனையார் விலங்கல்செய் நாடகசாலை
இன்னடம் பயிலும் இஞ்சிசூழ் தஞ்சை இராசரா சேச்சரத் திவர்க்கே.


- கருவூர்த்தேவர் . திருவிசைப்பா

அழகிய பெண்கள் அணிஅணியாய் நடம் புரியும், மதில்கள் சூழ்ந்த
இராசராசேச்சரம் எனும் பெருவுடையார் திருக்கோயில் உறையும் பெருமானே
பல காலம் இறை நினைப்போடு தொண்டுகள் பல செய்து தவமியற்றியவர்கள்
எல்லாம் காத்திருக்கும் பொழுது இந்த ஏழையேன் நெஞ்சகத்தைக் கோயிலாகக்
கொண்ட உன்னுடைய கருணையை என்னென்பேன்.

அஞ்சன வேல்விழி மடமாதர் அங்கவர் மாயையில் அலைவேனோ
விஞ்சுறு மாவுன தடிசேர விம்பம தாயருள் அருளாயோ
நஞ்சமு தாவுணும் அரனார்தம் நன்குமா ராவுமை அருள்பாலா
தஞ்செண வாமடி யவர்வாழத் தஞ்சையில் மேவிய பெருமாளே

-அருணகிரிநாதர் திருப்புகழ்

நஞ்சை அமுதாகக் கொண்ட சிவபெருமானது குமாரனாக விளங்கி, தம்மைத்
தஞ்சம் என நாடிவந்த அடியார்களுக்காக, தஞ்சைப்பெருவுடையார் தலத்தில்
உறையும் முருகப்பெருமானே, மை தீட்டிய கண்களோடு பிறரை மயக்கும்
எண்ணத்தோடு உலவும் பெண்களின் மாய வலையில் படாது, இறைவன்
திருவடிகளை நினைக்கும் பேற்றை எனக்கு அருள்வாயாக.



புஷ்ப அலங்காரம்
அருள்மிகு பெருவுடையார்
ஸ்ரீ பிரகதீஸ்வரர்



புஷ்ப அலங்காரம்
அருள்மிகு பெரியநாயகி அம்மன்
ஸ்ரீ பிரஹன்நாயகி

tnhrce.org



காய்கறி அலங்காரம் அருள்மிகு நந்தியெம் பெருமான்

உ
சிவமயம்

# வரலாறு

தஞ்சன் என்னும் அசுரன் ஸ்ரீ ஆனந்தவல்லியம்மனை அமிழ்த்திற்காக எதிர்த்துப் போர்புரிந்தான். அம்மன் ஸ்ரீ நாராயணனிடம் வேண்ட அவரும் அவனுடன் போரிட்டார். போரில் தோல்வியுற்ற அசுரன் இறக்கும் தருவாயில் திருமாலிடம் தன் பெயரால் இந்நகரம் விளங்க வேண்டுமென வரம் கேட்க அன்று முதல் இந்நகருக்கு தஞ்சன் ஊர் தஞ்சாவூர் எனப்பெயர் வழங்கலாயிற்று. "யான் உயிர் என்பது அறிகை வேல் மிகு தானை வேந்தர்க்குக் கடனே" என்பது புறநானூறு. உலகம் என்னும் உடலுக்குத் தான் உயிர் என்று மன்னன் அறிதல் வேண்டும். பொன்மலர் மணம் பெற்றாற்போல வையம் சிறக்க வாழ்ந்த மன்னன் இராசராசன் உள்ளுலகெல்லாம் உயர்வுள்ளதாக நினைக்கும் பண்பினன். இவனுக்கு நிகராக மற்றோர் அரசனை வரலாற்றில் காணல் அரிது. அவனது காலத்தில் சைவமும், தமிழும், கலையும், வீரமும் தழைத்து இனிது ஓங்கின.

சைவத்திருமுறைகளைத் தொகுத்துப் பரப்பி வளர்த்து அருளிய சிவபாத சேகரன் எனப் போற்றப்பட்ட மாமன்னன் இராசராசன் கி.பி. 1004 - 1010 இல் தென் கைலாயம் (தெக்ஷிணமேரு) எனப்போற்றப்படும் இத்தஞ்சைப் பெரிய கோயிலை எடுப்பித்தான். கவிஞனின் கற்பனையை சிதறவைக்கும் சிற்ப அமைப்பும், விஞ்ஞானியை வியக்க வைக்கும் வினைத்திறனும் கூடிக் களித்திடும் இடமே தஞ்சைப் பெரிய கோயிலாகும். இதில் அமைந்துள்ள அறிவியல், கலை மற்றும் பண்பாட்டு மரபியல் சிறப்புக்களைக் கண்டறிந்து யுனெஸ்கோ நிறுவனம் இதனை உலகப்பாரம்பரியச் சின்னமாக ஏற்று அதற்குரிய பட்டயத்தையும் வழங்கியுள்ளது. இது உலக அளவில் திராவிடக்கலைக்கும், தமிழனின் திறமைக்கும் கிடைத்த மாபெரு பெருமையாகும்.

சைவ சமயத்தின் பன்னிரு திருமுறைகளில் ஒன்றான ஒன்பதாம் திருமுறையான திருவிசைப்பாவில் கருவூர்த் தேவர் தஞ்சை இராசராசேச்சரம் பற்றி பாடிய திருப்பதிகங்கள் இடம்பெற்றுள்ளன. மேலும் இத்திருக்கோயிலின் பெருமையை அருணகிரிநாதரும் தனது திருப்புகழில் எடுத்துரைத்துள்ளார்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த இத்திருக்கோயிலைச் சோழ மன்னர்களுக்குப்பின் தஞ்சையை ஆண்ட நாயக்க மராட்டிய மன்னர்கள் பல திருப்பணிகள் செய்து போற்றிப் பாதுகாத்து வந்துள்ளனர். குறிப்பாகத் தஞ்சை நாயக்கர் மன்னர்களான செவ்வப்ப நாயக்கர், மற்று அச்சுதப்ப நாயக்கர்களால் ஆறுமுகர் ஆலயம் கட்டப்பட்டது. பின்னர் ஆட்சி செய்த மராட்டிய மன்னர் இரண்டாம் சரபோஜி அவர்கள் விநாயகர் கோயிலை அமைத்தும் திருமாலைப்பத்தியில் இலிங்கவடிவில் நவக்கிரகங்களையும் அஷ்டோத்ர சத லிங்கங்களையும் பிரதிஷ்டை செய்தார். அவருக்குப் பின் அவரது வழித்தோன்றல்கள் இத்திருக்கோயிலுக்கு வெள்ளியில் மான், மயில், ரிஷபம், யானை, மஞ்சம் முதலிய வாகனங்களும், அம்பாளுக்கு வெள்ளிக்கலசங்கள், ஆபரணங்கள் செய்துவித்தும், சூரக்கோட்டையில் 117 ஏக்கர் நஞ்செய், புன்செய் நிலங்களை மானியமாகவும் வழங்கியுள்ளனர்.

இராசராசன் காலத்தில் பிரம்மோற்சவத்தில் இராசராசேஸ்வரர் நாடகம் நடைபெற்று வந்தது. பின்னர் இரண்டாம் சரபோஜி மன்னர் காலத்திலிருந்து கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் தமிழில் இயற்றிய சரபேந்திரபூபால குறவஞ்சி நாடகம் நடைபெற்று வந்தது. அதனைத்தொடர்ந்து திருவிழாவின் 18 நாட்களிலும் சின்ன மேளம் என்ற நாட்டியக் கலை நிகழ்ச்சி இத்திருக்கோயிலில் நடைபெற்று வருகிறது.

# சித்திரைத் திருவிழா

தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானத்தின் நிர்வாகத்திற்குட்பட்ட 88 திருக்கோயில்களுள் ஒன்றான தஞ்சாவூர் பெரிய கோயில் என்கிற

## அருள்மிகு பெரியநாயகி உடனுறை பெருவுடையார் திருக்கோயில்

நிகழும் ஹேவிளம்பி வருடம் சித்திரை மாதம் 8 ஆம் நாள் (21.04.2017) வெள்ளிக்கிழமை துவங்கி சித்திரை மாதம் 25 ஆம் நாள் (08.05.2017) திங்கட்கிழமை வரை பதினெட்டு நாட்கள் கீழ் கண்ட நிகழ்ச்சி நிரலின் படி சைத்திரப் பிரம்மோற்சவம் வழக்கம் போல் நிகழ்வதால் தாங்கள் வந்திருந்து தரிசித்து எம்பெருமான் திருவருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகிறோம்

## சித்திரைப் பெருவிழா கொடியேற்றம் - துவஜாரோகணம்

நிகழும் ஹேவிளம்பி வருடம் சித்திரை மாதம் 8 ஆம் நாள் (21.4.2017) வெள்ளிக்கிழமை தசமி திதியும் அவிட்ட நட்சத்திரமும் சித்த யோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 6.00 மணிக்கு மேல் 7-30 மணிக்குள் மேஷ லக்னத்தில் துவஜாரோகணம் நடைபெறும்.

## எண் திசை கொடியேற்றம்-அஷ்டத்துவஜாரோகணம்

நிகழும் ஹேவிளம்பி வருடம் சித்திரை மாதம் 16 ஆம் நாள் (29.04.2017) சனிக்கிழமை திருதியை திதியும் ரோஹிணி நட்சத்திரமும் சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 10.30 மணிக்கு மேல் 11.30 மணிக்குள் கடக லக்னத்தில் அஷ்டத்துவஜாரோகணம் நடைபெறும்

## திருத்தேரோட்டம்-ரதா ரோஹணம்

நிகழும் ஹேவிளம்பி வருடம் சித்திரை மாதம் 22 ஆம் நாள் (05.05.2017) வெள்ளிக்கிழமை சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 6.00 மணிக்கு மேல் 6.30 மணிக்குள் மேஷ லக்னத்தில் திருத் தேரோட்டம் நடைபெறும்.

## துவஜா அவரோகணம்

நிகழும் ஹேவிளம்பி வருடம் சித்திரை மாதம் 25 ஆம் நாள் (08.05.2017) திங்கட்கிழமை திரியோதசி திதியும் சித்திரை நட்சத்திரமும் சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் மாலை 6.30 மணிக்கு மேல் துவஜா அவரோகணம் செய்து மாது ஸ்ரீ காமாட்சி பாயி சாகேப் அவர்களால் செய்விக்கப்பட்ட வெள்ளி ரிஷப வாகனங்களில் பஞ்சமூர்த்திகள் புறப்பாடு நடைபெறும்.

**திரு.ஜெ.பரணிதரன் பி.ஏ.,பி.எல்.,**
உதவி ஆணையர் / பொருளாளர் & மேலாளர்

**இராஜ ஸ்ரீ.சி.பாபாஜி ராஜா பான்ஸ்லே பி.இ.,**
பரம்பரை அறங்காவலர்

**திரு.ஆ.இரவிச்சந்திரன்**
கண்காணிப்பாளர்

**திரு.சி.சுரேஷ்**
கண்காணிப்பாளர்

**திரு.எஸ்.மாதவன்**
செயல் அலுவலர்/கண்காணிப்பாளர்

திருநாள் - 1

சித்திரை 8

(21.04.2017) வெள்ளிக்கிழமை

ஸ்ரீ ஹேவிளம்பி வருடம்

**காலை**

ஸ்ரீ சந்திரசேகரர் பஞ்சமூர்த்திகளுடன்

கோவிலுக்குள் புறப்பாடாகி

6 மணிக்குமேல் 7.30 மணிக்குள்

அவிட்ட நட்சத்திரத்தில் மேஷ லக்னத்தில்

**கொடியேற்றம்**

நடைபெறும்



உபயதாரர்

உயர்திரு. S.ஐயப்பன் குடும்பத்தார்

& விசஷால் மெடிக்கல்ஸ்,

பழையபேருந்து நிலையம்,

தஞ்சாவூர்

அஞ்சு எழுத்தும் எட்டு எழுத்தும், ஆறு எழுத்தும் நாலு எழுத்தும்
பிஞ்சு எழுத்தும் மேலைப் பெரு எழுத்தும் - நெஞ்சு அழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்திகனையும்
கூசாமல் காட்டக் கொடி

- கொடிக்கவி உமாபதி சிவம்

அஞ்சு எழுத்து - சி வா ய ந ம, எட்டெழுத்து - ஓம் ஹாம் ஹௌம் சி வா ய ந ம, ஆறெழுத்து - ஓம் சி வா ய ந ம, நான்கெழுத்து - ஓம் சி வா ய, பிஞ்செழுத்து - வா (சக்தி), பெரிய எழுத்து - சி (சிவம்), பேசும் எழுத்து - வ (சக்தி), பேசா எழுத்து - சி (சிவம்).

காலையில் திருமுறை விண்ணப்பம்

மாலையில் திருமுறை இன்னிசை நிகழ்ச்சி

நடைபெறும்.

சுவாமி புறப்பாடு: மாலை 6.30 மணியளவில் நடைபெறும்.


மாலை

# பஞ்ச மூர்த்திகள் படிச்சட்டத்தில் புறப்பாடு











உபயதாரர்

உயர்திரு ஜி.சுப்ரமண்ய சர்மா, தொழிலதிபர்

பாம்பே ஸ்வீட்ஸ், தஞ்சாவூர்.

சின்ன மேளம்

தஞ்சை பாவு பிள்ளை பரத நாட்டியப்பள்ளி

திருமதி. அனுராதா சுவாமிநாதன்

குழுவினர்

காலையில் திருமுறை விண்ணப்பம்

மாலையில் திருமுறை இன்னிசை நிகழ்ச்சி

நடைபெறும்.

சுவாமி புறப்பாடு: மாலை 6.30 மணியளவில் நடைபெறும்.

திருநாள் -2

சித்திரை- 9


(22.04.2017) சனிக்கிழமை

காலை

பல்லக்கு

தஞ்சாவூர்

அரண்மனை தேவஸ்தானம்



மாலை

சிம்ம வாகனத்தில்

ஸ்ரீ விநாயகர்

உபயதாரர்

உயர்திரு. எஸ்.சக்திபாலசந்தர்

தலைவர்

ஸ்ரீ மஹாநந்தி

ஆன்மீக சபை, தஞ்சாவூர்.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணில் பணிமின் கனிந்து.

-பரஞ்சோதியார் திருவிளையாடற்புராணம்

முழுமுதற் பொருளாக விளங்கும் விநாயகனே கொடிய வினைகளையெல்லாம் நீக்கி நம்முடைய விருப்பங்களையெல்லாம் நிறைவேற்றுவான். விநாயகனே விண்ணுலகிற்கும் மண்ணுலகிற்கும் தலைவனாக விளங்குபவன். எனவே அவன் திருவடிகளை அன்போடு பணிவோமாக.

சின்ன மேளம்


தஞ்சை கமலா இந்திரா பரத நாட்டியப்பள்ளி. மலேசியா

திருமதி.இந்திரா மாணிக்கம் குழுவினர்

காலையில் திருமுறை விண்ணப்பம்

மாலையில் திருமுறை இன்னிசை நிகழ்ச்சி நடைபெறும்.

சுவாமி புறப்பாடு: மாலை 6.30 மணியளவில் நடைபெறும்.



திருநாள் -3

சித்திரை - 10

(23.04.2017) ஞாயிற்றுக்கிழமை

**காலை**

**பல்லக்கு**

தஞ்சாவூர்

அரண்மனை தேவஸ்தானம்

**மாலை**

மூஞ்சூறு வாகனத்தில்

ஸ்ரீ விநாயகர் புறப்பாடு

உபயதாரர்

உயர்திரு. பி.சோழராஜா

பெரியகோயில்

வார வழிப்பாட்டுச் சிவனடியார்,

தஞ்சாவூர்

பிடியதன் உரு உமை கொளமிகு கரியது
வடிகொடு தன தடி வழிபடும் அவர் இடர்
கடி கணபதி வர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில் வலி வலமுறை இறையே

- திருஞான சம்பந்தர் தேவாரம்

அழகிய பெண்கள் நடமிடும் திருவலிவலத்தில் பெண் யானையாக இறைவியும் ஆண் யானையாகப் பெருமானும் உருக்கொள அவதரித்த வேழ முகம் படைத்த கணபதி, தம்முடைய திருவடிகளைத் தொழும் அடியார்களின் துன்பங்களைக் களைந்து அருளுபவர்.

**சின்ன மேளம்**

நந்திதா ஆர்ட்ஸ் - மலேசியா

திருமதி.ஹேமா நந்தினி குழுவினர்

காலையில் திருமுறை விண்ணப்பம்

மாலையில் திருமுறை இன்னிசை நிகழ்ச்சி

நடைபெறும்.

சுவாமி புறப்பாடு: மாலை 6.30 மணியளவில் நடைபெறும்.

திருநாள் -4

சித்திரை -11

(24.04.2017) திங்கட்கிழமை

**காலை**

**ஸ்ரீ விநாயகருக்கு**

**சந்தனக் காப்பு**

**தஞ்சாவூர்**

**அரண்மனை தேவஸ்தானம்**



**மாலை**

**மேஷ வாகனத்தில்**

**ஸ்ரீ சுப்பிரமணியர்**

**புறப்பாடு**

**உபயதாரர்**

உயர்திரு. வி.கந்தவேல்

ஊர்த்தியார்

நவநீதபுரம், தஞ்சாவூர்

கணை நீடெரி மாலரவம் வரைவில்லா
இணையா வெயின் மூன்று மெரித்த விறைவர்
பிணையா மயிலுங்குயில் சேர் மடவன்னம்
அணையும் பொழி லன்பிலாந்து றையாரே

– திருஞான சம்பந்தர் தேவாரம்

மயில்களும் குயில்களும் தத்தம் பிணையோடு உலவும் பொழில்கள் சூழ்ந்த அன்பிலாலந்துறை சிவபெருமான் நீண்ட தீயையும் திருமாலையும் அம்பாகவும் வாசுகி எனும் பாம்பை நாணாகவும் மேருமலையை வில்லாகவும் கொண்டு முப்புரம் எரிசெய்த பெருமையுடையவர்.

**சின்ன மேளம்**

நிர்த்திய கலாஞ்சலி டான்ஸ் அகாடமி- மலேசியா

திருமதி. சுதா தாமோதரன் -குழுவினர்

காலையில் திருமுறை விண்ணப்பம்

மாலையில் திருமுறை இன்னிசை நிகழ்ச்சி

நடைபெறும்.

சுவாமி புறப்பாடு: மாலை 6.30 மணியளவில் நடைபெறும்.

திருநாள் -5
சித்திரை-12
(25.04.2017) செவ்வாய்க்கிழமை

**காலை**
**ஸ்ரீ சுப்பிரமணியர்**
**பல்லக்கில் புறப்பாடு**
**தஞ்சாவூர்**
**அரண்மனை தேவஸ்தானம்**



**மாலை**
**வெள்ளி மயில்**
**வாகனத்தில்**
**ஸ்ரீ சுப்பிரமணியர்**
**புறப்பாடு**

**உபயதாரர்**
தெய்வத்திரு. ஆண்டிக்காடு
பாலசுப்பிரமணிய அய்யர்
குடும்பத்தார்

சமர சூரபன் மாவைத் தடித்த வேல்
குமரன் தாதை நற் கோழம்பம் மேவிய
அமரர் கோவினுக்கு அன்புடைத் தொண்டர்கள்
அமர லோக மதாளுடை யார்களே.

- திருஞான சம்பந்தர் தேவாரம்

திருக்கோழம்பம் எனும் தலத்தில் உறையும் சிவபெருமான், சூரபதுமனை வேலாயுதம் கொண்டு வென்ற முருகப்பெருமானின் தந்தையாவார். அவர் தேவர்களுக்கெல்லாம் தலைவர். அவ்விறைவனைப் பணிவோர் அமர உலகத்தை ஆளும் பேறு பெறுவர்.

**சின்ன மேளம்**
கல்யாணி நாட்டியாலயா சென்னை
திருமதி.ஹேமலதா மூர்த்தி குழுவினர்

காலையில் திருமுறை விண்ணப்பம்
மாலையில் திருமுறை இன்னிசை நிகழ்ச்சி
நடைபெறும்.

**சுவாமி புறப்பாடு : மாலை 6.30 மணியளவில் நடைபெறும்.**

திருநாள் -6

சித்திரை 13

(26.04.2017) புதன்கிழமை

காலை

ஸ்ரீ சுப்பிரமணியருக்கு
சந்தனக்காப்பு அலங்காரம்

தஞ்சாவூர்
அரண்மனை தேவஸ்தானம்


tnhrce.org

மாலை

சைவ
சமயாச்சாரியர்
நால்வர் புறப்பாடு

உபயதாரர்

உயர்திரு. பி.போஸ்.

வி.கே.ஜோதிராஜன்

மேனகா ஐஸ்கிரீம். தஞ்சாவூர்

பத்தராய்ப் பணிவார்களெல்லார்க்கு மடியேன்
பரமனையே பாடு வாரடியார்க்கும் மடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன்
திருவாரூர்ப் பிறந்தார் களெல்லார்க்கும் மடியேன்
முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கு மடியேன்
முழு நீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலுமடி சார்ந்தார் அடியார்க்கு மடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே

- சுந்தரமூர்த்தி சுவாமிகள்

திருவாரூரில் வீற்றிருக்கும் ஆரூரனாகிய சிவபெருமான் திருப்பேர் கொண்ட ஆரூரனாகிய நான்/ சிவபெருமான் மீது அன்பு கொண்டு பத்தர்களாகப் பணியும் அனைவருக்கும் அடியேன்; சிவபெருமானைப் பாடித் துதிக்கும் அடியவர்களின் அடியவர்களுக்கு அடியேன்; சிவபெருமான் மீது தம்முடைய சித்தத்தை வைத்த அடியவர்களுக்கு அடியேன்; பிறக்க முக்தி தரும் தலமாம் திருவாரூரில் பிறந்தவர்கள் அனைவருக்கும் அடியேன்; காலை மாலை இரவு எனும் முப்போதும் இறைவன் திருமேனிக்குத் திருமுழுக்காட்டும் அடியார்களுக்கு அடியேன்; தம்முடைய உடலில் பதினாறு இடங்களில் திருநீறு பூசி வழிபடும் அடியார்களுக்கு அடியேன்; தமக்குப் பின்னால் இறைவன் திருவடி அடைந்தவர்களுக்கும் அடியேன்.

சின்ன மேளம்

லாஸ்யா ஆர்ட்ஸ் மலேசியா

குரு திருமதி. உஷாதுரை குழுவினர்

காலையில் திருமுறை விண்ணப்பம்

மாலையில் திருமுறை இன்னிசை நிகழ்ச்சி

நடைபெறும்.

சுவாமி புறப்பாடு: மாலை 6.30 மணியளவில் நடைபெறும்.

திருநாள் -7

சித்திரை 14

(27.04.2017) வியாழக்கிழமை

காலை

நால்வர் பல்லக்கில்

கோயிலுக்குள் புறப்பாடு

சுவாமி சந்திரசேகரர் பட்டம்

தஞ்சாவூர்

அரண்மனை தேவஸ்தானம்



மாலை

சூரிய பிரபையில்

ஸ்ரீ சந்திரசேகரர் புறப்பாடு

உபயதாரர்

தொழிலதிபர்

உயர்திரு. ஆர்.கே.இராமநாதன்

காசி லாட்ஜ் ஏ/சி, காசி மஹால்,

தஞ்சாவூர்

சந்திரனொடு சூரியர் தாமுடன்
வந்து சீர் வழிபாடுகள் செய்தபின்
ஐந்தலையரவின் பணி கொண்டருள்
மைந்தர் போல் மணி நாகேச்சரவரே!

- திருக்குறுந்தொகை திருநாவுக்கரசு சுவாமிகள்

திருநாகேச்சரத்தில் உறையும் சிவபெருமானை சந்திரன், சூரியன் ஆகியோர் வழிபாடுகள் செய்த பின் ஐந்தலையுடைய நாகமும் வழிபட்டுப் பேறடைந்துள்ளது. இன்றும் நாக வழிபாடு நடைபெறுவதாக ஐதீகம்.

சின்ன மேளம்

கலா வந்தனா - புனே

திருமதி. கல்பனா பாலாஜி-குழுவினர்

காலையில் திருமுறை விண்ணப்பம்

மாலையில் திருமுறை இன்னிசை நிகழ்ச்சி நடைபெறும்.

சுவாமி புறப்பாடு: மாலை 6.30 மணியளவில் நடைபெறும்.

திருநாள் -8

சித்திரை 15

(28.04.2017) வெள்ளிக்கிழமை


காலை

ஸ்ரீ சந்திரசேகரர்

பல்லக்கில் புறப்பாடு

தஞ்சாவூர்

அரண்மனை தேவஸ்தானம்



மாலை

சந்திர பிரபையில்

ஸ்ரீ சந்திரசேகரர்

புறப்பாடு

உபயதாரர்

தஞ்சை மாவட்ட

கருவூலத்துறைஅலுவலர்கள்,

தஞ்சாவூர்

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர் சுமந் தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்
யாதும் சுவடு படாமல் ஐயாறடை கின்றபோது
காதல் மடப்பிடி யோடும் களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்

- திருநாவுக்கரசு சுவாமிகள்

கங்கையையும் திங்களாகிய சந்திரனையும் முடியில் சூடிய பெருமானை மலையான் மகளாகிய உமையம்மையோடு பாடிப்பரவி, எவ்விதச் சுவடும் தரையில் படாமல் திருவையாறு அடைந்தபோது பக்தர்கள் இறைவழிபாட்டிற்காக மலர்களையும், நீரையும் ஏந்தித் திருக்கோயிலுக்குள் சென்றார்கள். அச்சமயம் நானும் (திருநாவுக்கரசர்) அவர்கள் பின்னால் வரிசையில் நின்று வழிபாடு செய்த போது அன்பான பெண் யானையோடு ஆண்யானையும் அம்மையப்பராக அத்தலத்தில் வீற்றிருந்த காட்சியையும், காண அரிய காட்சியாகிய பெருமான் திருவடிகளையும் கண்டேன்.

சின்ன மேளம்

ஸ்ரீ முத்ராலயா - கொல்கத்தா

திருமதி. யக்ஞசினி சட்டர்ஜி குழுவினர்

காலையில் திருமுறை விண்ணப்பம்

மாலையில் திருமுறை இன்னிசை நிகழ்ச்சி நடைபெறும்.

சுவாமி புறப்பாடு: மாலை 6.30 மணியளவில் நடைபெறும்.

திருநாள் -9

சித்திரை 16

(29.04.2017) சனிக்கிழமை

காலை

10.30 மணிக்குமேல்


11.30 மணிக்குள்

மிதுன லக்னத்தில்

கோயிலுக்குள்

அஷ்டத்துவஜாரோகணம்

தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானம்



இரவு

7.00 மணிக்கு

ஸ்ரீ தியாகராஜ சுவாமி

பிரகாரத்தில்

பிரதட்சணமாகி வசந்த

மண்டபத்தில் பிரவேசம்

செங்கோல் வைபவம்

புறப்பாடு

உபயதாரர்

R.D.தனபாலன் செட்டியார்

A.O.சோமசுந்தரம் செட்டியார்

& சன்ஸ்

தஞ்சாவூர்.64 மனை வெள்ளாஞ் செட்டியார்

வகையறாக்கள்

முத்து விதான மணிப் பொற்கவரி முறையாலே
பத்தர்களோடு பாவையர் சூழப் பலிப்பின்னே
வித்தகக் கோல வெண்டலை மாலை விரதிகள்
அத்தன் ஆரூர் ஆதிரை நாளாலது வண்ணம்

- திருநாவுக்கரசு சுவாமிகள்

பிறக்க முத்தி தரும் தலமாகிய திருவாரூரில் முத்து விதானம் விளங்க, மணிப்பொற்கவரி வீசி, பக்தர்களும், பெண்களும் சூழ, ஆரூரானாகிய தியாகராஜரை அழகிய வீதிவிடங்கராக நான் (திருநாவுக்கரசர்) திருவாதிரை நன்னாளில் கண்டு உய்ந்தேன்.

சின்ன மேளம்

நந்தினி டான்ஸ் அகாடமி - பெங்களூரு

திருமதி. நந்தினி விஷ்னு - குழுவினர்

காலையில் திருமுறை விண்ணப்பம்

மாலையில் திருமுறை இன்னிசை நிகழ்ச்சி

நடைபெறும்.

சுவாமி புறப்பாடு: மாலை 6.30 மணியளவில் நடைபெறும்.

**திருநாள் - 10**

சித்திரை 17

(30.04.2017) ஞாயிற்றுக்கிழமை


**காலை**

**ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள்**

**யுதாஸ்தான பிரவேசம்**

**தஞ்சாவூர்**

**அரண்மனை தேவஸ்தானம்**



**மாலை**

**ஸ்ரீ சந்திரசேகரர்**

**முத்துப்பல்லக்கில்**

**புறப்பாடு**

**உபயதாரர்**

**உயர்திரு. டி.எஸ்.பரமசிவம்,**

**பி.ராஜேஸ்வரன்,**

**தஞ்சாவூர்.**

எந்தையீசன் எம்பெருமான் ஏறமர் கடவுள் என்றேத்தி
சிந்தை செய்பவர்க்கு அல்லால் சென்றுகை கூடுவதன்றால்
கந்த மாமலர் உந்திக் கடும்புனல் நிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலை நெல்வாயில் அரத்துறை அடிகள்தம் அருளே.

-திருஞான சம்பந்தர் தேவாரம்

வாசமிக்க மலர்களை உந்திக் கொண்டு வரும் நிவா எனும் ஆற்றங்கரையில் அமைந்துள்ள சோலை சூழ்ந்த திருநெல்வாயில் அரத்துறை அம்மையப்பராகிய ஈசரைத் தமக்குத் தலைவராக எண்ணி உளமாரச் சிந்தை செய்பவர்களைத் தவிர, மற்றவர்களுக்கு அப்பெருமானின் அருளைப் புரிந்து கொள்ள இயலாது.

**சின்ன மேளம்**

**பாலசரஸ்வதி இன்ஸ்டிடியூட் - சென்னை**

**திருமதி. அனிருத்தா நைட் - குழுவினர்**

**காலையில் திருமுறை விண்ணப்பம்**

**மாலையில் திருமுறை இன்னிசை நிகழ்ச்சி நடைபெறும்.**

**சுவாமி புறப்பாடு: மாலை 6.30 மணியளவில் நடைபெறும்.**

திருநாள் -11
சித்திரை 18
(01.05.2017) திங்கட்கிழமை

**காலை**
**பல்லக்கில்**
**ஸ்ரீ சந்திரசேகர்**

**தஞ்சாவூர்**
**அரண்மனை தேவஸ்தானம்**


tnhrce.org

**மாலை**
**பூத வாகனத்தில்**
**ஸ்ரீ சந்திரசேகரர்**
**புறப்பாடு**

**உபயதாரர்**
**தஞ்சாவூர் நாடார்கள்**
**உறவின்முறை**
**தர்ம பரிபாலன சங்கம்**
**தஞ்சாவூர்**

மருவார் கொன்றை மதிசூடி மாணிக்கத்தின் மலைபோல
வருவார் விடைமேல் மாதோடு மகிழ்ந்து பூதப்படைசூழத்
திருமால் பிரமன் இந்திரற்கும் தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமாள் கடவூர் மயானத்துப் பெரிய பெருமானடிகளே

– சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

மணமிக்க கொன்றை மலர்சூடி மாணிக்க மலையைப்போன்று விடையாகிய நந்தியெம்பெருமான் மீது அம்மையப்பராக எழுந்தருளும் கடவூர் மயானத்துப் பெருமான், திருமால், பிரமன், முப்பத்துமுக்கோடி தேவர்கள், நாகர்கள் அனைவருக்கும் தலைவராவார்.

சின்ன மேளம்
சுரபி அகாடமி ஆப் பைன் ஆர்ட்ஸ் - மும்பை
திருமதி. வினிடா ஸ்ரீ நந்தன் - குழுவினர்

காலையில் திருமுறை விண்ணப்பம்
மாலையில் திருமுறை இன்னிசை நிகழ்ச்சி
நடைபெறும்.

சுவாமி புறப்பாடு: மாலை 6.30 மணியளவில் நடைபெறும்.

திருநாள் -12

சித்திரை- 19

(02.05.2017) செவ்வாய்க்கிழமை

**காலை**

**ஸ்ரீ சந்திரசேகரருக்கு**

**சந்தனக்காப்பு**

**தஞ்சாவூர்**

**அரண்மனை தேவஸ்தானம்**



**மாலை**

**வெள்ளியானை**

**வாகனத்தில்**

**ஸ்ரீ சந்திரசேகரர்**

**புறப்பாடு**

**உபயதாரர்**

**தஞ்சாவூர்**

**ஸ்பின்னிங் மில் லிமிடெட்,**

**தஞ்சாவூர்**

மண்ணுலகில் பிறந்து நும்மை வாழ்த்தும் வழியடியார்
பொன்னுலகம் பெறுதல் தொண்டனேன் இன்று கண்டொழிந்தேன்
விண்ணுலகத்தவர்கள் விரும்ப வெள்ளையானையின் மேல்
என்னுடல் காட்டுவித்தான் நொடித்தான் மலை உத்தமனே.

- சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

இம்மண்ணுலகில் பிறந்து சிவபெருமானை வணங்கி வாழ்த்தும் அடியார்கள் முக்தி பெறுவார்கள் என்பதை நான் (சுந்தரர்) உணர்ந்தேன். விண்ணுலகத்தில் உள்ள தேவர்கள் எல்லாம் வரவேற்க என்னை வெள்ளையானை மீதமரச் செய்து கயிலாயம் அழைத்த நொடித்தான் மலை உத்தமனின் கருணைதான் என்னே.

**சின்ன மேளம்**

ராஜராஜேஸ்வரி பரத நாட்டியப் பள்ளி - தஞ்சாவூர்

திரு.B.J. பாரதி - குழுவினர்

காலையில் திருமுறை விண்ணப்பம்
மாலையில் திருமுறை இன்னிசை நிகழ்ச்சி
நடைபெறும்.

**சுவாமி புறப்பாடு: மாலை 6.30 மணியளவில் நடைபெறும்.**

திருநாள் -13
சித்திரை 20
(03.05.2017) புதன்கிழமை

**காலை**

**ஸ்ரீ சந்திரசேகரர்**
**வெண்ணெய்த்தாழி**
**அலங்காரம்**

**தஞ்சாவூர்**
**அரண்மனை தேவஸ்தானம்**



**மாலை**
**வெள்ளி வாகனத்தில்**
**பஞ்சமூர்த்திகள்**
**புறப்பாடு**

**உபயதாரர்**
உயர்திரு **V.மோகன்**
**M.கிருத்திகா**
**சாந்தி பில்டர்ஸ் பிரைவேட்**
**லிமிடெட் திருச்சி 621216**

தேடிக் கொணர்ந்தாய் திருமுறைகள் பத்தரெலாம்
கவடித் தொழுதிடவே பெருங்கோயில் கட்டுவித்தாய்
பொன்னியின் செல்வனென்றே போற்றுகின்றார் சோழ
மன்னவனே நின்தாள் நினைந்து
- கரந்தையான்

கற்களே இல்லாத தஞ்சையின் நஞ்சைப் பூமியில் மாபெரும் கற்கோயிலை எடுப்பித்த மாமன்னன் இராசராசன் தில்லையில் பூட்டிக் கிடந்த திருமுறைச் சுவடிகளையெல்லாம் மீட்டுக் கொணர்ந்து திருமுறை கண்ட சோழனானான். மாபுகழ் படைத்த மன்னனைப் பொன்னியின் (காவிரி) செல்வனாகப் போற்றுவர்.

**சின்ன மேளம்**
கலாலயா மியுசிக் அன்டு டான்ஸ் சென்டர்
திருவனந்தபுரம் - திரு. ஜாய்கிருஷ்ணன் - குழுவினர்

காலையில் திருமுறை விண்ணப்பம்
மாலையில் திருமுறை இன்னிசை நிகழ்ச்சி
நடைபெறும்.

**சுவாமி புறப்பாடு: மாலை 6.30 மணியளவில் நடைபெறும்.**

## திருநாள் -13

சித்திரை 20

(03.05.2017) புதன்கிழமை

மாலை

## வெள்ளி வாகனங்களில் பஞ்சமூர்த்திகள் வீதியுலா



அறுவகைச் சமயத் தோர்க்கு மவ்வவர் பொருளாய் வேறாங்
குறியது வுடைத்தாய் வேதாகமங்களின் குறியிறந்தங்
கறிவினி லருளான் மன்னியம்மை யோ டப்பனாகிச்
செறிவுவொழியாது நின்ற சிவனடி சென்னி வைப்பாம்

- அருணந்தி சிவாசாரியர் (சிவஞான சித்தியார்)

புறப்புறச் சமயத்தைச் சார்ந்த உலகாயதம், மாத்யமிகழ், யோகாசாரர், செளந்திராந்திகர்,வைபாடிகர், ஆருகதர் என்ற ஆறு சமயத்தாருக்கும், புறச்-சமய்தைச் சார்ந்த தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகமதம், பாஞ்ச ராத்திரம் ஆகிய ஆறு சமயத்தாருக்கும், அகப்புறச் சமயமாகிய பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கியவாத சைவம் ஆகிய இந்த ஆறு சமயத்தாருக்கும், அகச்சமயத்தைச் சார்ந்த பாடாணவாதசைவம், பேதவாதசைவம், சிவசமவாதசைவம், சிவ சாங்கிராந்தவாதசைவம், ஈசுவர அவிகாரவாதசைவம், சிவாத்துவிதசைவம் ஆக இந்த ஆறு சமயத்தாருக்கும் பொருளாக விளங்கி வேத ஆகமங்களெல்லாம் கடந்த அறிவான் வடிவாக விளங்கும் ஞானமூர்த்தியாகிய சிவபெருமானுடைய திருவடிகளைச் சிரமேற்கொள்வோமாக.

காலையில் திருமுறை விண்ணப்பம்
மாலையில் திருமுறை இன்னிசை நிகழ்ச்சி
நடைபெறும்.

சுவாமி புறப்பாடு: மாலை 6.30 மணியளவில் நடைபெறும்.

திருநாள் -13

சித்திரை 20

(03.05.2017) புதன்கிழமை



மாலை

**ஓலைச்சப்பரத்தில் ஸ்ரீ சந்திரசேகரர், அம்பாள் புறப்பாடு**

ஓலைச்சப்பரம் உபயதாரர்

உயர்திரு V.சுப்பிரமணியம், Managing Director, Subramaniam & Co,

மாணிக்கம் நகர், MC ரோடு, தஞ்சாவூர்.

திருநாள் -14

சித்திரை 21

(04.05.2017) வியாழக்கிழமை

மாலை

ஸ்ரீ சந்திரசேகரர்

கைலாச பர்வத வாகனத்தில்

புறப்பாடு

தஞ்சாவூர்

அரண்மனை தேவஸ்தானம்



உபயதாரர்

உயர்திரு. எஸ். மீனாட்சி ஆச்சி

குடும்பத்தினர்

செந்தூர் மெடிக்கல்ஸ்,

தஞ்சாவூர்

பொன்னின் வெண் திருநீறு புனைந்தெனப்
பன்னும் நிள்பனி மால்வரைப் பாலது
தன்னை யார்க்கும் அறிவரியான் என்றும்
மன்னிவாழ் கயிலைத் திருமா மலை

– சேக்கிழார் பெரியபுராணம்

பொன்மேருமலையில் பனி படர்ந்த கயிலாய மலையின் காட்சி
தங்கமலை திருநீறு அணிந்தார்ப்போலே விளங்குகிறது.
அக்கயிலாய மலையில் யாவரும் அறிவரிதாகிய
சிவபெருமான் நிலைபெற்று உள்ளான்.

சின்ன மேளம்

திருச்செந்தூர் டான்ஸ் அகாடமி - மலேசியா

திருமதி. சாய்ராஜராஜேஸ்வரி - குழுவினர்

காலையில் திருமுறை விண்ணப்பம்

மாலையில் திருமுறை இன்னிசை நிகழ்ச்

நடைபெறும்.

சுவாமி புறப்பாடு: மாலை 6.30 மணியளவில் நடைபெறும்.

திருநாள் -15

சித்திரை 22

(05.05.2017) வெள்ளிக்கிழமை

அதிகாலை 4.00 மணிக்குமேல்

5.30 மணிக்குள்



ஸ்ரீ விநாயகர்



ஸ்ரீ தியாகராஜர், ஸ்கந்தர், ஸ்ரீ கமலாம்பாள்



ஸ்ரீ வள்ளி, ஸ்ரீ தெய்வானை ஸ்ரீ சுப்ரமணியர்

முத்துமணி அலங்கார சப்பரத்தில் பஞ்சமூர்த்திகள் புறப்பாடு



ஸ்ரீ நீலோத்பலாம்பாள்



ஸ்ரீ சண்டிகேஸ்வரர்

உபயதாரர்

தஞ்சை நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம்

தஞ்சாவூர்

## திருநாள் -15

சித்திரை 22

(05.05.2017) வெள்ளிக்கிழமை




# திருத்தேரோட்டம்

அதிகாலை 5.30 மணிக்குமேல் **ஸ்ரீ தியாகராஜசுவாமி அம்பாள்**

தேரில் எழுந்தருளல்

**6 மணிக்குமேல் 6.30 மணிக்குள் மேஷ லக்னத்தில்**

**திருத்தேர் வடம்பிடித்தல்**

தேரோட்டம் நான்கு ராஜவீதிகளில் நடைபெறும்.

மாலை ஸ்ரீ தியாகராஜசுவாமி, அம்பாள்

தேர்மண்டபத்திலிருந்து திருக்கோயிலுக்கு யதாஸ்தான பிரவேசம்

**தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானம்**

போழொத்த வெண்மதியம் சூடிப் பொலிந்திலங்கு
வேழத்து உரிபோர்த்தான் வெள்வளையாள் தான் வெருவ
ஊழித்தீ அன்னானை ஓங்கொலிமாப் பூண்டதோர்
ஆழித்தேர் வித்தகனை நான் கண்டது ஆரூரே.

– திருநாவுக்கரசர் தேவாரம்

பிறைச்சந்திரனைத் தலையில் அணிந்தும், யானைத்தோலைப் போர்த்தியும், தீமையை அழிப்பதில் ஊழித் தீயாவும் விளங்கும் அடியார்பால் அன்புடைய ஆரூரானை, வேதக்குதிரைகளைப் பூட்டி உலாவரும் வீதி விடங்கப் பெருமானை ஆழித் தேரில் திருவாரூரில் கண்டு உய்ந்தேன்.

**சின்ன மேளம்**

சித்ரா ஆர்ட்ஸ் அண்டு கல்சுரல் அகாடமி - சிதம்பரம்

குமாரி. நிரஞ்சனா ராமநாத் - குழுவினர்

காலையில் திருமுறை விண்ணப்பம்

மாலையில் திருமுறை இன்னிசை நிகழ்ச்சி

நடைபெறும்.

**சுவாமி புறப்பாடு: மாலை 6.30 மணியளவில் நடைபெறும்.**

திருநாள் -16
சித்திரை 23
(06.05.2017) சனிக்கிழமை

**மாலை**
**குதிரை வாகனத்தில்**
**ஸ்ரீ சந்திரசேகரர்**
**புறப்பாடு**
**தஞ்சாவூர்**
**அரண்மனை தேவஸ்தானம்**


tnhrce.org

**உபயதாரர்**
உயர்திரு. ச.சிதம்பரம்
**எம்.எஸ். மணியம்**
**ட்ரான்ஸ்போர்ட், பட்டுக்கோட்டை**
**தஞ்சாவூர்**

நரியைக் குதிரை செய்வானும் நரகரைத் தேவு செய்வானும்
விரதம் கொண்டாட வல்லானும் விச்சின்றி நறு செய்வானும்
முரசதிர்ந்து ஆனைமுன் ஓடமுன் பணிந்து அன்பர்களேத்த
அரவரைச் சாத்தி நின்றானும் ஆரூர் அமர்ந்த அம்மானே

– திருநாவுக்கரசர் தேவாரம்

நரியைக் குதிரையாகவும், மனிதர்களைத் தேவர்களாகவும் ஆக்க வல்லவனும், வித்தின்றி அனைத்து விளைவுகளையும் செய்ய வல்லவனும் ஆகிய பெருமான் நாளெல்லாம் திருவிழா காணும் திருவாரூரில் பக்தர்களுக்கு அருள் செய்ய அமர்ந்துள்ளான்.

**சின்ன மேளம்**
ஸ்வாமா பைன் ஆர்ட்ஸ் - மலேசியா
திரு. அஜீத் பாஸ்கர் தாஸ் - குழுவினர்


காலையில் திருமுறை விண்ணப்பம்
மாலையில் திருமுறை இன்னிசை நிகழ்ச்சி
நடைபெறும்.

**சுவாமி புறப்பாடு: மாலை 6.30 மணியளவில் நடைபெறும்.**

திருநாள் -17
சித்திரை 24
(07.05.2017) ஞாயிற்றுக்கிழமை

**காலை**
**ஸ்ரீ தியாகராஜர்**
**பந்தற் காட்சியுடன்**
**யதாஸ்தான பிரவேசம்**

உபயதாரர்
உயர்திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி
வழக்கறிஞர்
மேலவீதி, தஞ்சாவூர்



**மாலை**
**ஸ்ரீ நடராஜர்**
**வெள்ளை சாத்தி**
**புறப்பாடு**

தஞ்சாவூர்
அரண்மனை தேவஸ்தானம்

சூலப்படையானைச் சூழாக வீழருவிக்
கோலத்தோள் குங்குமம் சேர் குன்றெட்டுடையானைப்
பாலொத்த மென்மொழியாள் பங்கனைப் பாங்காய
ஆலத்தின் கீழானை நான் கண்டது ஆரூரே.
- திருநாவுக்கரசர் தேவாரம்

சூலப்படையுடையவனும், எண்தோள் வீசி நின்றாடும் சிறப்புடையவனும் பால்போன்ற தூய்மையான மொழியினைப் பேசும் உமையம்மையைப் பாகமாக உடையவனும், ஆலமர்ச் செல்வனாக விளங்குபவனும் ஆகிய சிவபெருமானை நான் (திருநாவுக்கரசர்) திருவாரூரில் கண்டேன்.

**சின்ன மேளம்**
ஸ்ரீராதா கிருஷ்ணன் பைன் ஆர்ட்ஸ் மலேசியா
திருமதி. நளினி ராதாகிருஷ்ணன் குழுவினர்

காலையில் திருமுறை விண்ணப்பம்
மாலையில் திருமுறை இன்னிசை நிகழ்ச்சி
நடைபெறும்.

**சுவாமி புறப்பாடு: மாலை 6.30 மணியளவில் நடைபெறும்.**

## திருநாள் -18

சித்திரை 25

(08.05.2017) திங்கட்கிழமை

காலை



## ஸ்ரீ தியாகராஜர் ருத்திரபாத தரிசனத்துடன் யதாஸ்தான பிரவேசம்

உபயதாரர்

உயர்திரு.O.V.குணசேகரன், பாலாஜி நகர், தஞ்சாவூர் 1

காலை

## நடராஜர் நான்கு ராஜவீதி புறப்பாடு

மதியம்

## சூர்ணோற்சவம் ஸ்ரீ சந்திரசேகரர் கோயிலுக்குள் உலா வந்து தீர்த்தம் கொடுத்தல்

## தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானம்

## திருநாள் -18

சித்திரை 25

(08.05.2017) திங்கட்கிழமை

**மாலை**



**கொடியிறக்கம் ( துவஜா அவரோகணம் ) செய்து மாது ஸ்ரீ காமாட்சி பாயி சாகேப் அவர்களால் செய்விக்கப்பட்ட வெள்ளி ரிஷப வாகனங்களில் பஞ்சமூர்த்திகள் புறப்பாடு**

உபயதாரர்

சௌராஷ்டிரா மகா ஜனங்கள், மகர் நோன்புச்சாவடி, தஞ்சாவூர்

**சின்ன மேளம்**

மயூரி கல்சுரல் ஆர்ட்ஸ் சென்டர் - கோவை

திருமதி. மகாலெஷ்மி -குழுவினர்

சின்ன மேளம் நிகழ்ச்சி அமைப்பு

தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானம்

தஞ்சாவூர் பாவுபிள்ளை பரதநாட்டியப்பள்ளி

**சுவாமி புறப்பாடு: மாலை 6.30 மணியளவில் நடைபெறும்.**

## சித்திரைப் பெருவிழாவில்

## 18 நாட்கள் காலை, மாலை, பன்னிரு திருமுறைப் பாராயணம்



சைவத்தின் மேற்சமயம் வேறில்லை அதில் சார் சிவமாம்

தெய்வத்தின் மேல் தெய்வம் இல் எனும் நான்மறைச்செம்பொருள்

வாய்மை வைத்த சீர்த்திருத்தேவாரமும் திருவாசகமும்

உய்வைத் தரச்செய்த நால்வர் பொற்றாள் எம் உயிர்த்துணையே

... சைவ எல்லப்ப நாவலர்



... தெய்வ சேக்கிழார்

**நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு**

சிவத்திரு மு.சிவநேசன்,ஓதுவார் அ/மி பெருவுடையார் திருக்கோயில்.தஞ்சாவூர்.

சிவத்திரு மு.தீபக்ராஜா,ஓதுவார் அ/மி வசிஸ்டேஸ்வரர்திருக்கோயில். கரந்தை,தஞ்சாவூர்.

தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானம் மற்றும் ஆலவாய் அண்ணல் அறக்கட்டளை மதுரை

**திருச்சிற்றம்பலம்**

தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை

தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானம்

# அருள்மிகு பெரியநாயகி அம்மன் உடனுறை பெருவுடையார் திருக்கோயில், தஞ்சாவூர்.

## அபிஷேக கட்டணம் மற்றும் அஷ்டோத்திர கட்டணச்சீட்டு விபரம்

tnhrce.org

| அபிஷேக திட்டம் | கட்டணம் | Abisheka Schemes | Fare |
|---|---|---|---|
| அருள்மிகு விநாயகர் | - ரூ.750 | Sri Vinayahar | - Rs.750 |
| அருள்மிகு சுப்ரமணியர் | - ரூ.750 | Sri Subramanyar | - Rs.750 |
| அருள்மிகு பிரகதீஸ்வரர் | - ரூ.2500 | Sri Brahadeswarer | - Rs.2500 |
| அருள்மிகு பிரகன் நாயகி | - ரூ.1500 | Sri Brahannayaki | - Rs.1500 |
| அருள்மிகு வாராஹி | - ரூ.1250 | Sri Varahi | - Rs.1250 |

| சிறப்பு அபிஷேக திட்டம் | கட்டணம் | Special Abisheka Schemes | Fare |
|---|---|---|---|
| அருள்மிகு பிரகதீஸ்வரர் | - ரூ.5000 | Sri Brahadeswarer | - Rs.5000 |
| அருள்மிகு பிரகன் நாயகி | - ரூ.2500 | Sri Brahannayaki | - Rs.2500 |
| அருள்மிகு நந்தீஸ்வரர் | - ரூ.6500 | Sri Nandheswarar | - Rs.6500 |

அஷ்டோத்திர கட்டணச்சீட்டு - ரூ.5.00

திருக்கோயில் நிர்வாகம்

அருள்மிகு பெரியநாயகி அம்மன் உடனுறை
அருள்மிகு பெருவுடையார் திருக்கோயில்,
தஞ்சாவூர்.

## முக்கிய திருவிழாக்கள் விபரம்

| | |
|---|---|
| சித்திரை மாதம் - 1 ஆம் நாள் (14.4..2017) வெள்ளிக்கிழமை - தமிழ் வருடப்பிறப்பு | ஐப்பசி மாதம் - 13 ஆம் நாள் (30.10.2017) திங்கட்கிழமை - சதயவிழா |
| சித்திரை மாதம் - 8 ஆம் நாள் (21.4..2017) வெள்ளிக்கிழமை - சித்திரைப்பெருவிழா ஆரம்பம் | ஐப்பசி மாதம் - 17 ஆம் நாள் (3.11.2017) வெள்ளிக்கிழமை - அன்னாபிஷேகம் |
| ஆனி மாதம் - 9 ஆம் நாள் (23.6.2017) வெள்ளிக்கிழமை - ஆஷாட நவராத்திரி ஆரம்பம் | கார்த்திகை மாதம் - 4, 11, 18, 25 ஆம் நாள் (20-11-2017, 27-11-2017, 4-12-2017, 11-12-2017) திங்கட்கிழமை - 1008 சங்காபிஷேகம் |
| ஆனி மாதம் - 23 ஆம் நாள் (7.7.2017) வெள்ளிக்கிழமை - திருக்கல்யாணவைபவம் ஆரம்பம் | மார்கழி மாதம் - 18 ஆம் நாள் (2.1.2018) செவ்வாய்க்கிழமை - ஆருத்ரா தரிசனம் |
| ஆடி மாதம் - 10 ஆம் நாள் (26.7.2017) புதன்கிழமை - திரு ஆடிப்பூரம் | தை மாதம் - 1 ஆம் நாள் (14.1.2018) ஞாயிற்றுக்கிழமை - தைப் பொங்கல் - தை 2 ஆம் நாள் (15.1.2018) திங்கட்கிழமை - மகரசங்கராந்தி பெருவிழா |
| புரட்டாசி மாதம் - 5 ஆம் நாள் (21.9.2017) வியாழக்கிழமை - நவராத்திரி கலைவிழா ஆரம்பம் | மாசி மாதம் - 2 ஆம் நாள் (14.2.2018) புதன்கிழமை - மகாசிவராத்திரி விழா |

தனிப்பட்ட முறையில் தனி நபர்கள் எவரும் பணமாகவோ, பொருளாகவோ, நன்கொடை என்ற பெயரில் ஆலயத்தின் சார்பாக பெறுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. ஆலயத்திற்கு நன்கொடை செலுத்துபவர்கள் வரைவோலையாகவோ, காசோலையாகவோ, பணமாகவோ, திருக்கோயில் அலுவலகத்தில் செலுத்தி உரிய ரசீது பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.


உதவி ஆணையர் / பொருளாளர் & மேலாளர்
மத்திய அலுவலகம்
தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானம்
மேலவீதி, தஞ்சாவூர்

திருக்கோயில் நிர்வாகம்
Ph: 04362-223384

## மாமன்னன் இராசராச சோழன்

திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந் தனக்கே உரிமை பூண்ட பெருமன்னன் இராசராசன் கி.பி.985-ல் சோழப்பெருமன்னனாக அரியணையில் அமர்ந்தான். அழகிலும், அறிவிலும், ஆற்றலிலும் சிறந்து விளங்கிய இப்பெரு மன்னன் இராசகேசரி என்ற பட்டம் பூண்டு கி.பி.1014 வரை ஆட்சி புரிந்து தமிழகத்தின் பெருமையை உலகறியச் செய்தனன்.

தந்தை வழியில் தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்களுள் ஒருவரான செம்பியர் குடியிலும், தாய்வழியில் சங்ககாலத்திலிருந்து சிறந்த திருமுடிக்காரி போன்ற பெருந்தகை பிறந்த மலயமான் குடியையும் சேர்ந்த இப்பெருமகனின் இயற்பெயர் அருண்மொழிவர்மன் என்பதாகும். உலகமே வியக்கும் இராசராசேச்சரம் என்னும் தஞ்சைப் பெருவுடையார் திருக்கோயிலை எடுப்பித்தவன். சிவபாத சேகரன் என்னும் சிறப்புப் பெயர் பெற்றவன்.

தில்லையில் செல்லரித்த நிலையில் மூடிகிடந்த மூவர் தேவாரப்பாக்களை நம்பியாண்டார் நம்பியின் துணை கொண்டு மீட்டு எல்லா திருக்கோயில்களிலும் தேவாரம் ஓதச் செய்தவன். திருமுறைகளைத் தொகுத்தளித்த பெருமகன். ஐப்பசி சதய நாளில் பிறந்த பெருந்தகையாளன். சேர நாட்டை இராசராசன் வெற்றி கண்ட போது அங்கு சதய நாளில் திருவிழா கொண்டாடச் செய்தவன் என்பதை

"சதயநாள் விழா உதியர் மண்டலம்
தன்னில் வைத்தவன்"

என்ற கலிங்கத்துப்பரணி பாடல் வரிகள் மூலம் அறிய முடிகிறது.

**வையம் நீடுக மாமழை மன்னுக**
**மெய் விரும்பிய அன்பர் விளங்குக**
**சைவ நன்னெறி தாந்தழைத்து ஓங்குக**
**தெய்வ வெண்திருநீறு சிறக்கவே.**

**திருச்சிற்றம்பலம்**


tnhrce.org

# Sri Brihadeeswarar Temple

The temple had its foundations laid out by the Tamil emperor arulmozhivarman, popularly called rajaraja Chola, in 1002 Ce, as the first of the great Tamil Chola building projects

The Brihadeeswarar Temple was built to grace the throne of the Chola empire in compliance to a command given to him in his dream. The scale and grandeur is in the Chola tradition. and symmetrical geometry rules the temple layout. Temples from this period and the following two centuries are an expression of the Tamils (Chola) wealth, power and artistic expertise. The emergence of such features as the multifaceted columns with projecting square capitals signal the arrival of the new Chola style.

tnhrce.org



The Brihadeeswarar Temple was built to be the royal temple to display the emperor's vision of his power and his relationship to the universal order. The temple was the site of the major royal ceremonies such as anointing the emperor and linking him with its deity, Shiva, and the daily rituals of the deities were mirrored by those of the king. It is an architectural exemplar showcasing the pure form of the dravida type of temple architecture and representative of the Chola empire ideology and the Tamil civilisation in southern india. The temple "TesTify To The BrillianTaChievemenTs of The Chola in **ARCHITECTURE**, **SCULPTURE ,PAINTING AND BRONZE CASTING**

**உபயதாரர்கள் கவனிக்க**

குறிப்பு : காலையில் உற்சவமூர்த்தி அபிஷேகம் சரியாக 10.00 மணிக்கு நடைபெறும். உற்சவ காலங்களில் சுவாமி புறப்பாடு மாலை 6.30 மணியளவில் நடைபெறும். சுவாமிபுறப்பாடு குறிப்பிட்ட நேரத்தில் நடைபெற உபயதாரர்கள் முன்னதாகவே வந்திருந்து ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

## தேர் திருவிழாவில்
## ஒருங்கிணைப்பு மற்றும்
## ஒத்துழைப்பு நல்கும்

மாவட்ட நிர்வாகம்
வருவாய்த்துறை
மாவட்ட காவல்துறை
தஞ்சாவூர் மாநகராட்சி
தமிழ்நாடு மின்சார வாரியம்
பொதுப்பணித்துறை
சுகாதாரத்துறை
போக்குவரத்துத்துறை
நெடுஞ்சாலைத்துறை
தீயணைப்புத்துறை
சுற்றுலாத்துறை
வேளாண் பொறியியல் துறை
பாரத மிகு மின் நிலையம்
செஞ்சிலுவைச் சங்கம்
இந்திய தொல்லியல் துறை
மற்றும் ஆன்மீகப் பெருமக்கள்

இந்து சமய அறநிலையத் துறை

-தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானம்




E.Mail: thanjavurpalacedevastnam88@gmail.com / Tel (O): +91 4362 223384
Tel (Temple): +91 4362 274476 / Fax : +91 4362 223387